# புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் 2005
## சட்டம் எப்படி பாதிக்கிறது : உற்பத்தியாளர்களை மற்றும் சுங்க வரி-அற்ற சில்லறை வியாபாரிகளை

## அடிப்படைகள்

- புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் (SFOA) மே 31, 2006 அன்று அமலுக்கு வருகிறது.
- இச்சட்டம் ஒன்டேரியோவின் தொழிலாளர்களையும், பொது மக்களையும் மறைமுகப் புகையின் (Second-hand smoke) இடர்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, உள்ளடக்கப்பட்ட வேலையிடங்கள் மற்றும் உள்ளடக்கப்பட்ட பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்கிறது.
- புகையிலைப் பொருட்களை விளம்பர காட்சிக்கு வைப்பதை இச்சட்டம் தடை விதிக்கும். மே 31, 2008-க்குள் இத்தடை முழுதாக அமலில் இருக்கும். இளைஞர்கள் புகை பிடிக்க துவங்குவதைத் தடுப்பதும், ஏற்கெனவே புகைப் பிடித்தலை விட்டுவிட்டவர்கள் தொடர்ந்து புகை பிடிக்காமலேயே இருக்க உதவுவதுமே இச்சட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

## உற்பத்தியாளர்கள் மற்றும் சுங்கவரி-அற்ற சில்லறை வியாபாரிகள்

புகையிலைப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் சுங்க வரி-அற்ற சில்லறை வியாபாரிகளுக்கு தனித்துவமிக்க வியாபாரத் தேவைகள் உள்ளதை சுகாதார முன்னேற்ற அமைச்சகம் அறிந்துள்ளது, எனவே, சட்டத்தின் பிரிவு எண் 3.1-ல், உற்பத்தியாளர்கள் மற்றும் சுங்க வரி-அற்ற சில்லறை வியாபாரிகளுக்கென, குறிப்பிட்ட சில விளம்பர காட்சிக்கென வைப்பதற்கான தடை விலக்குகளை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விதிமுறை உற்பத்தியாளர்களை கீழ் கண்டவாறு வரையறைக்கிறது : ஆ) ஒன்டேரியோவில் விநியோகிக்க, விற்க அல்லது சேமிக்க புகையிலைப் பொருட்களை உற்பத்தி செய்பவர், புனைபவர் அல்லது தயாரிப்பவர். ஆ) புகையிலை வரிச்சட்டத்தின் கீழ் உற்பத்தியாளர் பதிவுச் சான்றிதழைக் கொண்டிருக்க வேண்டும். SFOA-வின் கீழ், இச்சட்டத்தின் பிரிவு எண் 3.1-ன் விளம்பர காட்சிக்கு வைப்பதின் தடை விலக்கை பெற தயாரிப்பாளர் சுகாதார முன்னேற்ற அமைச்சகத்திடம் பதிவு செய்து கொண்டிருப்பது அவசியமாகும்.

சுங்க விரி-அற்ற சில்லறை வியாபாரி, மத்திய அரசாங்க சுங்க வரி 2(1) சட்டத்தின் கீழ் வறையறைக்கப்படுகிறார். சுகாதார முன்னேற்றத்திற்கான அமைச்சகத்துடன் பதிவு செய்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

## தயாரிப்பாளர்கள் மற்றும் சுங்க வரி-அற்ற சில்லறை வியாபாரிகளுக்கான விலக்குகள்

பதிவு செய்யப்பட்ட தயாரிப்பாளர் அல்லது ஒரு சுங்க வரி-அற்ற சில்லறை வியாபாரி கீழ்க்கண்டவற்றிற்கென அனுமதிக்கப்படுகிறார் :

- புகையிலைப் பொருட்களை கவுன்டர்மீதான விளம்பரத்தில் காட்சிக்கு வைத்தல்;
- மே 31, 2008-அன்று புகையிலை பொருட்கள் மீது பொதுவாக காட்சிக்கு வைக்க தடை உத்தரவு அமலுக்கு வந்தாலும், புகையிலை பொருட்களை விளம்பர காட்சிக்கு வைத்தல்;
- வாங்குவதற்கு முன்னதாகவே புகையிலைப் பொருட்களை கையாள வாங்குவோருக்கு அனுமதி அளித்தல். இவ்வழக்கத்தின் மீது மத்திய அரசாங்க புகையிலை சட்டம் (பிரிவு எண்.11) தடை விதித்துள்ளது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது எனவே தயாரிப்பாளர்கள் இன்னமும் கூட அச்சட்டத்துடன் ஒத்துப்போவது அவசியமாகும். உரிமம் பெற்ற சுங்க வரி-அற்ற கடைகளுக்கு கையாளும்பு கட்டுப்பாடுகளிலிருந்து இச்சட்டம் விலக்கு வழங்குகிறது;

## பதிவு செய்யப்பட்ட தயாரிப்பாளர்களுக்கும் சுங்க வரி-அற்ற சில்லறை வியாபாரிகளுக்கும் பொதுவான கடமைப்பொறுப்புகள்

இச்சட்டம் மற்றும் விதிமுறைகளுடன் அனைத்து தயாரிப்பாளர்கள் மற்றும் சுங்க வரி-அற்ற சில்லறை வியாபாரிகள் முழுவதுமாக ஏத்துப்போக வேண்டும். கீழ்க்கண்டவை இவற்றில் அடங்கும்.

- புகையிலைப் பொருட்களும், புகையிலை துணைப் பொருட்களும் தயாரிப்பாளர்கள் அல்லது சுங்க வரி-அற்ற சில்லறை வியாபாரிகளின் வியாபார இடங்களின் வெளியேயிருந்து வெளிப்படையாகத் தெரியாமலிருப்பதை உறுதி படுத்த வேண்டும்.
- வாடிக்கையாளர்களை தங்கள் வியாபார இடங்களினுள் வர, வெளியேயிருந்து அல்லது உட்புற பொதுவான பகுதிகளிலிருந்து அனுமதித்தல் அதாவது வாடிக்கையாளர்கள் தயாரிப்பாளர் இடத்தை அல்லது ஒரு சுங்க வரி-அற்ற சில்லறை வியாபாரி கடைக்கு மற்றோரு கடையிலிருந்து நுழைய முடியாது.
- தயாரிப்பாளர் அல்லது சுங்க வரி-அற்ற சில்லறை வியாபாரியின் வியாபார இடம் ஒரு பொது வழியாக இருக்கக்கூடாது. உதாரணமாக, ஒரு வாடிக்கையாளர் வெளியேயிருந்து

கடையினுள் வரலாமே அன்றி, மற்றோரு கடை அல்லது ஷாப்பிங் மாலுக்கு இக்கடையில் புகுந்து  உட்புறத்திலுள்ள பொதுவான பகுதிக்கு செல்ல இயலக்கூடாது.

## பதிவு செய்யப்பட்ட தயாரிப்பாளர்களுக்கு மட்டுமே விலக்குகள்

பதிவு செய்யப்பட்ட தயாரிப்பாளர் கீழ்க்கண்டவற்றிற்கென அனுமதிக்கப் படுகிறார் :

- கீழ்க்கண்டவை போன்ற வியாபார ஊக்குவிப்பு பொருட்களை விளம்பர காட்சிக்கு வைத்தல்:
    - குறிப்பிட்ட பிராண்டுகளுடன் தொடர்புடைய அலங்கார முகப்புகள் மற்றும் பின்புறத் திரை வைத்தல் (வழக்கமாக இவை "பவர் வாள்" எனப்படுகின்றன)
    - பின் புறத்திலிருந்து வெளிச்சமளிக்கும் அல்லது விளக்கு அலங்காரம் செய்யப்பட்ட முகப்புக்கள்
    - வியாபார ஊக்குவிப்பு விளக்கு அலங்காரம்
    - மூன்று பரிமாண காட்சிப்பொருட்கள்

காட்டி வைக்கவேண்டிய குறிகள் உட்பட (கீழே காணவும்) **SFOA**- வின் மற்ற அனைத்து நிபந்தனைகளும் தயாரிப்பாளர் அல்லது சுங்க வரி-அற்ற சில்லறை வியாபாரிக்கும் பொருந்தும்.

## தயாரிப்பாளர்களுக்கு மட்டுமேயான கடமைப் பொறுப்புகள்

- விலக்கு பெறும் பொருட்டு சுகாதார முன்னேற்ற அமைச்சகத்துடன் பதிவு செய்து கொள்ளல்.
- 19 உயதுக்கும் குறைவானவர்களுடன் குறைந்தது 19 வயதானவர்கள் வந்தாலே ஒழிய தயாரிப்பாளர் கடைக்குள் வர அனுமதிக்கக்கூடாது. ஒருவர் 25 வயதுக்கும் குறைவானவராக இருப்பது போல் தோன்றினால் அவரது அடையாள அட்டையை காண்பிக்குமாறு தயாரிப்பாளர் அவரை கேட்க வேண்டும். அதன் மூலம் அவர் குறைந்தது 19 வயதுடையவராக இருப்பதை உறுதி படுத்திக்கொள்ள வேண்டும்.

## தயாரிப்பாளர்கள் மற்றும் சுங்க வரி-அற்ற சில்லறை வியாபாரிகளுக்கான அடையாளக்குறிகள்

*புகை பிடிக்கக்கூடாது* குறிகள், அனைந்து நுழைவாயில்கள், வெளியோறும் வழிகள், கழிவறைகள் மற்றும் பிற பொருத்தமான இடங்களில் வைக்கப்பட வேண்டும். இதன் மூலம்

புகை பிடிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது என அனைவரும் அறிந்து கொள்வதை உறுதி படுத்திக் கொள்ள முடியும்.

புகையிலைப் பொருட்களின் அனைத்து சில்லறை வியாபாரிகளும் விற்பனை செய்யுமிடத்தில் வாங்குபவர் தெளிவாக பார்க்கக்கூடிய வகையில் கீழ்க்கண்ட விளம்பரங்களை வைக்க வேண்டும்.

- ஒரு வயதுக் கட்டுப்பாடு மற்றும் உடல் நல எச்சரிக்கை குறி.
- ஒரு அரசு ஐடி (அடையாள) குறி.

தேவையான அடையாளக்குறிகளை பெறுவதை பற்றிய தகவலுக்கென தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாராப்பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

## சில்லறை வியாபாரத் தேவைகளுக்கான அடையாளக்குறிகள் (சுங்க வரி-அற்ற சில்லறை வியாபாரிகளுக்குப் பொருத்தமானது)

புகையிலைப் பொருட்களின் விற்பனையைக் குறிப்பிடும் அடையாளக் குறிகள், சில்லறை வியாபாரிகள் புகையிலைப் பொருட்களை விற்பதையும் அப்பொருட்களின் விலையையும் மட்டுமே வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்க அனுமதிக்கப் படுகிறது. மேலும்:

- அடையாளக் குறியின் அளவு 968 சதுர செண்டிமீட்டரைத் தாண்டக் கூடாது.
- விற்பனைக்குறிகள் வெள்ளைநிறப் பின்னணியில் கருப்பு எழுத்துக்களில் இருக்க வேண்டும்.
- ஒரு குறியில் தோன்றும் வாசகம் கடைக்கு வெளியிலிருந்து தெரியக்கூடாது.
- சில்லறை வியாபாரி ஒருவர், புகையிலை பொருட்கள் மற்றும்/அல்லது புகையிலைத் தயாரிப்பு துணைப்பொருட்களை குறிக்கும் உயர்ந்த பட்சம் மூன்று அடையாள குறிகளை மட்டுமே காட்சிக்கு வைக்க முடியும்.
- புகையிலை அல்லது புகையிலைத்-தொடர்பான தயாரிப்பின் ஒரு குறிப்பிட்ட பிராண்டை அடையாளக் குறிகள் அடையாளம் காட்டக்கூடாது.

தேவையான அடையாளக்குறிகளை பெறுவதை பற்றிய தகவலுக்கென தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாராப்பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

## நான் எவ்வாறு தயாரிப்பாளராக பதிவு செய்து கொள்வது ?

தயாரிப்பாளரக பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் சுகாதார முன்னேற்ற அமைச்சக வலைதளத்தில், கீழ்க்கண்ட முகவரியில் கிடைக்கின்றன.
http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free/legislation.asp

## அமலாக்கம்

சட்டத்தை அமல்படுத்தும் பொருட்டு உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவுகள் தயாரிப்பாளர் விற்பனைக்கடைகள் மற்றும் சுங்க வரி-அற்ற சில்லறை விற்பனை நிலையங்களில் சோதனைகளையும், விசாரணைகளையும் நடத்துவர்.

## அபராதங்கள்

தனி நபர் ஒருவருக்கு, முதல் குற்றத்திற்கென உயர்ந்தபட்ச அபராதமாக $4,000 மற்றும் மூன்றாவது மற்றும் அதற்கும் மேற்பட்ட குற்றங்களுக்கென $100,000 உயர்ந்தபட்ச அபராதமாக விதிக்கப்படும். கம்பனிகள், முதல் குற்றத்திக்கு $10,000 மற்றும் மூன்றாவது அல்லது அதற்கும் மேற்பட்ட குற்றங்களுக்கு உயர்ந்த பட்சமாக $1,50,000 அபராதம் விதிக்கப்படும்.

இந்த தகவல் தாளை ஒரு விரைவு நோக்கீட்டு உபயோகத்திற்கென மட்டுமே பயன் படுத்த பரிந்துரைக்கப் படுகிறது. கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

கட்டணமற்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும்  நீங்கள் தகவல் பெறலாம்.

- **INFOline** 1-866-396-1760
- **TTY** 1-800-387-5559

வேலை நேரம் : திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை.

புகை அற்ற ஒன்டேரியோ சட்டம் பற்றிய கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து சுகாதார முன்னேற்றத்திற்கான ஒன்டேரியோ அமைச்சக வலையகத்திற்கு வருகை தாருங்கள்: http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free/legislation.asp.

மே 2006



Ontario